HHR17-1-5-TA

# இயேசுவின் கடைசி வார்த்தைகள்: வெளிப்படுத்துதல் புத்தகம் - நிகழ்ச்சி 5

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு, கிறிஸ்தவர்களின் பெரும்பாலானோர் தங்களுடைய வாழ்நாளில் இயேசு கிறிஸ்து திரும்பவும் பூமிக்கு வந்திடுவார் என விசுவாசிக்கிறார்கள். வெளிப்படுத்தின விசேஷமானது எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை கிறிஸ்தவ சபைகளுக்கு இயேசு கிறிஸ்துவால் கூறப்பட்ட இறுதி வார்த்தைகளாகும். உபத்திரவ காலத்தின் போது பூமியின் மீது வர இருக்கும் கடுமையான நிகழ்வுகளை குறித்து எச்சரிக்கிறார், சாத்தானுக்கு என்ன நடக்கும், அந்திகிறிஸ்துவுக்கு என்னவாகும், கள்ள மார்கத்தை யார் பின்பற்றுவார்கள் என்று கூறுகிறார். அதுமட்டுமல்ல அர்மகெதான் யுத்தத்தில் என்ன நடக்கும், தமது இரண்டாம் வருகையில் என்ன நடக்கும், ஆயிர வருட அரசாட்சி, இறுதி நியாயத்தீர்ப்பு, என்பவைகளை சொல்லி எப்படி தேவன் தமது பிள்ளைகளுக்கு நித்திய எதிர்காலத்தை திட்டமிட்டிருக்கிறார் என்று கூறுகிறார். இந்த தொடரில் தேவன் எதிர்காலத்தில் சம்பவிக்க போகிறவைகளாக சொல்லியிருக்கிற ஒவ்வொரு நிகழ்வுகளையும் நீங்கள் புரிந்துகொள்வதற்கு எதுவாக வெளிப்படுத்தின விசேஷத்தை அதிகாரம் அதிகாரமாக பார்க்க இருக்கிறோம்.

இந்த தொடரின் இரண்டாவது பாகத்தின் இன்றைய நிகழ்ச்சியின் தலைப்பு, “நியாயத்தீர்ப்புகளும் உபத்திரவ காலத்தின் முக்கிய பங்காளிகளும், வெளிப்படுத்தல் 7 முதல் 13 வரை.

எனது விருந்தினர்கள்: Dr. எட் ஹின்ட்சன், டீன் லிபர்டி பல்கலைகழகத்தின் ஸ்கூல் ஆப் ரிலிஜியன் மற்றும் மதங்களை பற்றிய பிரிவின் விரிவுரையாளர், நாற்பதிற்கும் மேலான புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

Dr. மார்க் ஹிட்ச்காக் டல்லாஸ் இறையியல் செமினரியில் வேதாகமத்தை விவரித்தல் பிரிவின் துணை பேராசிரியராக இருக்கிறார். இவர் வேதாகம தீர்க்க தரிசனங்கள் என்ற தலைப்பில் 30 புத்தகங்களை எழுதியிருக்கிறார், இவர் விசுவாச வேதாக திருச்சபையின் மூத்த போதகராக இருக்கிறார்.

Dr. ரான் ரோடாஸ் ஐவரும் டல்லாஸ் இறையியல் செமினரியில் போதனை செய்கிறார், இவர் தேவ வசனங்கள் ஊழியத்தின் சிறப்பு தலைவராகவும் இருந்து வருகிறார். இவர் தீர்க்கதரிசனம் என்ற தலைப்பில் 70 புத்தகங்களை எழுதியிருக்கிறார். இந்த சிறப்பு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான்தான் ஜான் அன்கெர்பெர்க், உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. இதுவரை தொடர்ந்து பார்த்துகொண்டிருப்பீர்களானால், இப்போது நாம் வெளிப்படுத்தின விசேஷத்தை அதிகாரம் அதிகாரமாக பார்த்துகொண்டு இருக்கிறோம் என்பதை இப்போது மத்திய பகுதியில் இருப்பதையும் அறிந்திருப்பீர்கள், சரியா? வெளிப்படுத்தின விசேஷத்தின் தீர்க்கதரிசன வார்த்தைகள் என்ற தலைப்பில் சுமார் நூற்றி நாற்பது புத்தகங்களை எழுதியிருக்கிற மூன்று சிறந்த மேதைகள் நம்மத்தியில் இருக்கிறார்கள். நம்மிடையே சிறந்த நிபுணர்கள் இருக்கிறார்கள். நம்முடைய இருப்பவர்கள் Dr. எட் ஹின்ட்சன், Dr. மார்க் ஹிட்ச்காக், Dr. ரான் ரோடாஸ், இவர்களை பற்றி ஏற்கனவே அறிமுகப்படுத்தி இருக்கிறேன்.

இப்ப நீங்க பேசும்படியாக விரும்புகிறேன், எட், நாம எங்க இருக்கிறோம் என்று இப்போது நமக்கு தெளிவாக ஒரு காரியத்தை சொல்ல முடியுமா. சுவிசேஷ செய்தியை

பிரசங்கிக்கும்படி தேவன் இந்த பூமியில் கொண்டு வரப்போகிற இரண்டு அற்புதமான சாட்சிகளை பற்றி பார்க்க இருக்கிறோம், இல்லையா? அவர்களுக்கு விசேஷமான வல்லமை கொடுப்பட்டு இருப்பதை பார்க்க முடிகிறது. அதை பார்ப்பதற்கு முன்பு, இன்றைக்கு முதல் முதலாக பார்க்கும் நபர்களுக்கு இந்த காரியத்தை பற்றிய முன்னோட்டத்தை சுருக்கமாக சொல்ல விரும்புகிறீர்களா.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**.ஓகே, ஜான். இப்ப நாம வெளிப்படுதத்தின விசேஷத்தின் நடு பாதியில் வந்து நிற்கிறோம். அதிகாரம் 1 முன்னுரையாக, துவக்கமாக இருக்கிறது. உயிர்த்தெழுத இயேசு யோவானுக்கு பத்மூ தீவில் தரிசனமாகி தமது சொந்த சீஷனுக்கு ஒரு கட்டளை தருகிறார், “வெளிப்படுத்தின விசேஷத்தை எழுது.” அடுத்த இரண்டாம் மூன்றாம் அதிகாரங்களில் இயேசு பேசுகிறார், இவை அன்றைக்கு ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்கு சொல்லப்பட்ட வார்த்தைகளாக இருக்கிறது. ஒவ்வொரு சபைக்கும் பேசும்போது சபையின் தேவனாக அதிகாரத்தோடு பேசுகிறார்.

அடுத்த பகுதிக்கு வந்தோம் அங்க ஒரு பிரச்சனை இருப்பதையும் அதற்கான தீர்வையும் பார்த்தோம் புத்தகத்தின் நான்காம் ஐந்தாம் அதிகாரங்கள். யோவான் வானத்திற்கு எடுத்துகொள்ளப்படுகிறார். அவர் பிதாவாகிய தேவனை சிங்காசனத்தில் பார்க்கிறார். ஏழு முத்திரைகள் கொண்ட புஸ்தகம் அவர் கரத்தில் இருக்கு, ஆனா அதை வாங்கவும் அதை திறக்கவும் பாத்திரவான் யாருமில்லை பிறகு அதை சுதந்தரிக்க ஆட்டுக்குட்டியானவர் வெளிப்படுகிறார். அதிலிருந்து வெளிப்படுத்தின புஸ்தகம் முழுவதும் இயேசு தேவ ஆட்டுக்குட்டியாக தான் அடையாளப்படுத்த படுகிறார், நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்தார். அவர் பாத்திரர். அவர் வந்து அந்த சுருள்களை வாங்கி, நியாயத்தீர்ப்பை பிரகடணிக்கிறார். அதற்கு பிறகு அவர் வந்து அந்த முத்திரைகளை உடைப்பதையும் அதற்கு பிறகு அந்த நியாயத்தீர்ப்புகளை பற்றியும் அதிகாரம் 6 முதல் 11 வரை இருப்பவைகளையும் பார்த்தோம். ஆறு முத்திரைகள் உடைக்கப்பட்டது; ஆட்டுக்குட்டியின் கோபாக்கினை ஊற்றப்பட்டது.

அடுத்து ஒரு காரியம் சேர்க்கப்படுகிறது. ஏழாவது முத்திரை திறக்கப்பட்டது. இந்த ஏழாவது முத்திரையில் இருந்து ஏழு எக்காள நியாயத்தீர்ப்பின் தோனி வெளிப்படுகிறது. அடுத்து அந்த ஏழு எக்காள நியாய்த்தீர்ப்பிற்கு பிறகு, ஆறாவது எக்காலாத்தின் போது, இங்க திடீருன்னு இன்னொரு காரியம் இணைகிறது அந்த புத்தகத்தின் ஒரு பகுதியை யோவான் புசிக்கும்படி கூறப்படுகிறார் (?) இங்க இரண்டு மனிதர்கள் கொல்லபப்ட போகிறார்கள் (?) இருந்தாலும் அவங்க மறுபடியும் உயிரடைந்து எழும்புவார்கள் (?) வெளிப்படுத்தின விசேஷத்தின் புத்தகத்தின் நடுவில் சொல்லபட்டிருக்கும் இந்த காரியங்களுக்கு என்னதான் அர்த்தம் எங்கதான் போய் முடியப்போகிறது?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இப்ப ஆரம்பிக்கலாம், ரான், இந்த சின்ன புத்தகத்திலிருந்து போகலாம். அவங்க பேசுகிற அந்த சிறிய புத்தகம் என்பது எதை குறிக்கிறது அதிலென்ன இருக்கிறது?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:...**இந்த, சிறிய புஸ்தகம் என்ன என்பதை  பற்றி பலதரப்பட்ட வியாக்கியானங்கள் இருக்கிறது. அதாவது, சமீபத்தில் கூட சில விமர்சகர்கள் சொன்னவைகளை பார்த்துகொண்டு இருந்தேன் அதில் ஒருவர் இது பூமிக்கு கொடுக்கப்பட்ட உயிலாக இருக்கிறது, என்றார் இது முதல்ல நாம சொன்ன அந்த புத்தகத்தை பற்றி சொல்லிய கருத்திற்கு ஒத்திருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சுருள்களுக்கு சொன்னோம்.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:...**வேறு சிலர் இதை ஏழு முத்திரைகள் கொண்ட சுருள் என்று சொல்லுவார்கள். என்னை பொருத்தவரைக்கும் உபத்திரவ காலத்தில் நடக்க போகிற சம்பவங்களை தீர்க்கதரிசனமாக கூறும் தகவல்களை அடங்கிய புத்தகம் என்றே சொல்லிடுவேன். மேலும், அதோடுகூட, இதற்கு தலைப்பு சொல்லன்னுன்னா, நா சொல்ற தலைப்பு “வரப்போகிற காரியங்கள்”, என்னுடைய பழைய பேராசிரியர் சொன்ன ஒரு புத்தகத்தின் பெயர் அவர் டிவிட் பெண்டிகாஸ்ட். அதற்கு காரணம் என்னன்னா இந்த

புத்தகத்தை புசித்தேன் என்று யோவான் சொல்கிறார் அதில் அத்தனை தகவல்கள் இருந்திருக்கும். அது முதல்ல சாப்பிட இனிப்பாக இருக்குது, ஆனா அது கசப்பா மாறிடுது. அதற்கு என்ன அர்த்தம் என்று நினைக்கிறேன் என்றால் அதில் கிறிஸ்தவர்களுக்கு சிறப்பான செய்திகள் சொல்லப்பட்டு இருக்கிறதென்று நினைக்கிறேன். ஆயிர வருட அரசாட்சி நமக்காக வந்துகொண்டே இருக்கிறது. வர்ணிக்க முடியாத நித்திய எதிர்காலம் நமக்காக காத்துகொண்டு இருக்கிறது. அது இனிப்பான செய்தி. ஆனா அது அவன் வயிற்றிற்குள் போகும்போது கசப்பாக மாறிவிடுகிறது. இது உண்மையாகவே அவிசுவாசிகளை பற்றியும் அவர்கள் மீது வர இருக்கபோகிற நியாயத்தீர்ப்புகளை பற்றி சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை குறிக்கிறது என்று நினைக்கிறன், குறிப்பாக அதில் கடுமையான, கலச நியாயத்தீர்ப்புகள் அதாவது இறுதியாக அக்கினி கடலை வெளிப்படுத்தும் காரியங்கள் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. ஆனா, மார்க், இந்த காரியங்களோட சேர்த்து இரண்டு அருமையான சாட்சிகளை குறித்தும் சொல்லப்பட்டு இருக்கிறது. அவர்கள் யார்? அவங்க என்ன செய்றாங்க? அவர்களுக்கான நோக்கம் என்ன?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**..சரி, வரப்போகிற நாட்களில் வெளிபடுத்தல் 13ம் அதிகாரத்தை பார்க்க இருக்கிறோம், அதுல மிருகம் இருக்கு – அந்தி கிறிஸ்து – அடுத்து கள்ள தீர்க்க தரிசி. வரப்போகிற உபத்திரவ காலத்தில் சாத்தானுடைய ஆட்கள் இரண்டு பேர் இருப்பாங்க. வெளிப்படுத்தல் 11 தேவனுடைய மனிதர்கள் இரண்டு பேர் தேவனுக்காக இருப்பாங்க, இந்த இரண்டு சாட்சிகளையும் அவர் முன்பாக வரவைப்பார். இந்த இரண்டு சாட்சிகளும் முன்பாக வந்து நிற்பார்கள். இரண்டு ஆண்கள், என நினைக்கிறேன். அவர்கள் சாட்சிகளாக அழைக்கப்படுகிறார்கள். இது தனிநபருக்காக வார்த்தையாக வேதத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. அவர்கள் சாக்குடை அணிந்திருப்பார்கள். மரிப்பார்கள், ஆனா மூன்றரை நாட்களுக்கு பிறகு அவர்கள் உயிரோடு எழுந்திருப்பார்கள்.

இந்த, இரண்டு சாட்சிகளும் ஊழியம் செய்வார்கள், அதாவது, சுமார் 1,260 நாட்கள் அல்லது நாற்பத்தி இரண்டு வாரங்கள், அதாவது சுமார் மூன்றரை ஆண்டுகள். இந்த மூன்றரை ஆண்டுகள் என்பது உபத்திரவ காலத்தின் முதல் பாதியிலோ அல்லது இரண்டாவது பாதியிலோ இருக்கலாம். அவர்கள் இருவரும் கொல்லப்படுவார்கள். அவர்கள் மரிக்க போகிறார்கள். ஆனாலும் மூன்றரை நாட்களுக்கு பிறகு தேவன் அற்புதவிதமாக அவர்களை உயிரோடு எழுப்புவார் அதை பூமியில் உள்ள அனைவரும் பார்த்துகொண்டு இருப்பார்கள். இந்த தனிநபர்களை தேவன் எழுப்ப போகிறார். இதுல நிறைய கருத்துக்கள் இருக்கிறது, இவர்கள், யாராக இருப்பார்கள் என்ற எண்ணம். கடந்த காலத்தில் வாழ்ந்த மனிதர்களை தேவன் மறுபடியும்ம் கொண்டு வர போகிறாரா? சிலர் இவர்கள் ஏனோக்கு மற்றும் எலியா என்று சொல்லுகிறார்கள்? சிலர் இவர்கள் எலியாவும் மோசேயும் என்று சொல்கிறார்கள். சிலர் இவர்கள இருங்கு பேரையும் தேவன் எதிர்காலத்தில் எழும்ப செய்வார் என்று சொல்கிறார்கள், ஆனா இவர்கள் முன்பு வாழ்ந்த நபர்கள் என்பதை அவர்கள் நம்புவது இல்லை.

மறுபடியும், இதுதான் என்று நாம கண்டிப்பாக சொல்ல முடியாத காரியங்களில் இதுவும் ஒன்று. என்னுடைய கண்ணோட்டத்தின் படி இது எலியா மோசே என்பேன். எலியாவும் மோசேயும் மல்கியா புஸ்தகத்தில் சொல்லப்பட்டு இருக்கிறார்கள், பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகம் அது. அவர்கள் மத்தேயு 17 மறுரூப மலையில் இயேசுவோடு தோன்றியிருக்கிறார்கள் இது அவருடைய வருகைக்கு முன் மாதிரியாக இருக்கு. அவர்கள் மோசேயும் எலியாவும் செய்த காரியங்களை தான் செய்கிறார்கள். மோசே செய்ததை போல தண்ணீரை இரத்தமாக மாற்றுகிறார்கள், எலியாவை போல வானத்தில் இருந்து அக்கினியை இறக்குகிறார்கள். அப்படின்னா ஒருவேளை தேவன் மறுபடியும் இந்த இரண்டு பேரையும் இறுதியான அழைப்பு கொடுக்க அனுப்பிடலாம், விரும்பினால், உபத்திர காலகட்டத்தில் இறுதி நேரத்தில் அவருக்கு சாட்சியாக நிற்கும் வாய்ப்பை பெறலாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உலகம் அவர்களை வெறுக்கிறது.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**ஆமா, உலகம் அவர்களை வெறுக்கிறது.

ஒருவேளை இந்த நபர்கள் மனித கருவிகளாக செயல்பட்டு எட்டாம் அதிகாரம் ஒன்பதாம் அதிகாரத்தில் காணப்படும் எக்காள நியாயத்தீர்ப்பை கொண்டு வருகிறவர்களாக இருக்கலாம், மோசே எகிப்தின் மீது நியாயத்தீர்ப்பை கொண்டு வந்தது போல செய்திடுவார்களோ. இவர்கள் நியாயத்தீர்ப்பு சம்பவிக்கும்படி செய்திடுவார்கள். அது உண்மையாக இருந்தால், இந்த உலகம் ஏன் அவர்களை வெறுக்கிறது என்றும் ஏன் அவர்களை அழித்து கொள்ள விரும்புகிறது என்றும் நமக்கு தெளிவாக புரியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அவர்களால அது ஏன் முடியாம போச்சு?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**ஏன்னா, வேதம் சொல்கிறது தேவன் அவர்களை பாதுகாத்துகொண்டார்...

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** எந்த விதத்தில்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**இந்த கால கட்டத்தில் காத்திட்டார். சரி, அவர்கள் தங்களுக்கு விரோதமாக வரக்கூடியவர்களை கொன்று போடும் அதிகாரம் கொண்டிருந்தார்கள், அவர்கள் வாயிலிருந்து அக்கி புறப்பட்டு அவர்களை பட்சித்தது என்று சொல்லப்பட்டு இருக்கிறது, சரி, இப்ப, சிலர் கேட்பதுண்டு, “ சரி, இவங்க, இப்படிதான் இருக்க போறாங்கனு நீங்க நினைக்கிறீங்களா, அதாவது, அக்கினியை கக்கும் மனிதர்களாக? ஆனா நாம எலியாவின் வாழ்க்கையை பார்க்கவேண்டும். எலியா, இரண்டு முறை அவருக்கு விரோதமாக சேனை அனுப்ப பட்டது, 50 நபர்கள் இருப்பார்கள். எலியா பேசினதும் தேவன் வானத்திலிருந்து அக்கினியை அனுப்ப அது அவர்களை கொண்டு போட்டது. அவர்களுடைய வாயில் இருந்து அக்கினி புறப்படும் என்று சொல்லும்போது, அவர்கள் வார்த்தைகளை பேசுவார்கள் என நினைக்கிறேன், அப்படி செய்யும்போது, தேவனே சத்துருக்கள் மீது நியாயத்தீர்ப்பை கொண்டு வருகிறவராக இருக்கிறார். இங்க, அவர்கள் வெல்ல முடியாதவர்கள், உண்மையா,

அவங்க ஊழிய நேரத்தில் அவர்களை தோற்கடிக்க முடியாது. ஆனா, அழகா சொல்லப்பட்டு இருக்கிறது அவர்கள் தங்கள் சாட்சியின் வசனத்தை சொல்ல முடித்தவுடம், தேவன் அவர்களை மிருகத்தின் கையாலோ அல்லது அந்தி கிறிஸ்துவினால் கொல்லப்பட ஒப்புகொடுப்பார். இது நமக்கு ஏற்புடையதாக இருக்கிறதென்று நினைக்கிறேன். நம்முடைய ஊழியத்தில் நம்மூலம் தேவன் செய்ய நினைக்கிறதை செய்துமுடிகும்வரை யாரும் நம்மை ஜெயிக்க முடியாது. நம்முடைய சாட்சியின் வசனத்தை நாம் பிரகடணித்து முடிக்கும்வரை நமக்கு ஒன்றும் சம்பவிக்காது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ரான், அவர்களுடைய முடிவு எப்படி இருக்கும் என்று சொல்லுங்க, உலகம் என்ன செய்கிறது, அப்பறம் அவங்க எப்படி உயிர்த்தெழுகிறார்கள்?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...சரி, இது அருமையான ஒரு காரியமாக இருக்க போகிறது., அவங்க சடலங்கள் அடக்கம்பண்ணப்படாம எருசலேமின் வீதிகளில் கிடத்தப்பட்டு இருக்குமாம். உலகம் முழுவதும் அதை பார்க்க போகிறது. அது ஒருவேளை தொலைகாட்சிகள் மூலமாகவும் இணையதளம் மூலமாகவோ இருக்கலாம். அந்த வீடியோ ரொம்பவே வைரளா இருக்க போறது உறுதி. ஜனங்களும் அதை குறித்து ரொம்ப ஆர்வத்தோடு இருப்பாங்க இதுக்காக ஒருவருக்கு ஒருவர் பரிசுகளை பகிர்ந்துகொள்வார்கள். அவர்களுடைய மரணத்தை இவர்கள் கொண்டாடி மகிழப்போகிறார்கள். சரி, இதுல நீங்க புரிந்துகொள்ளவேண்டிய காரியம் என்னன்னா ஆதிகாலங்களில், அதாவது, ஆரம்பத்தில், பழைய ஏற்பாட்டு காலத்தில் சொல்லப்பட்ட மக்கள், சடலம் அடக்கம் பண்ணப்படாவிட்டால் அதை அவமானம் என்பார்கள். இந்த காலத்தில் ஒரு பிணத்தின் மீது காரிதுப்புவதற்கு இணையாக இருக்கும். அது மிகப்பெரிய அவமானம். இந்த இரண்டு நபர்களும் மரிக்கும்படி கொல்லப்பட்டதற்கு பிறகு, முழு உலகமும் தேவனுடைய வல்லமையான தீர்க்கதரிசிகளுக்கு மிகப்பெரிய அவமானத்தை உண்டாக்கிடுவார்கள். அதற்கு பிறகு ஒரு ஆச்சரியமான காரியம் சம்பவிக்கும்.

தேவனுடைய சுவாசம் இந்த தீர்க்கதரிசளுக்குள் வர அவர்கள் எழுந்து நிற்ப்பார்கள். அப்போதும் எத்திசையிலும் பயம் உண்டாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இதை டிவி வழியா பார்த்துட்டு இருக்கோன்னு வைத்துகொள்ளுங்கள்.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:...**அதாவது, என்னுடைய மனக்கண்களால் அவங்க மரணத்தில் இருந்து உயிரோடு எழுந்து நின்று பேசுவதை கற்பனை செய்கிறேன், "ஏதாவது கேள்வியிருக்கா? அதாவது, அந்த உயிர்த்தெழுதலில் ஒரு மிகப்பெரிய காரியம் காணப்படுகிறது. அவர்கள் பரலோகத்திற்கு ஏறி போகிறார்கள்.இப்ப, இங்க என்ன நடக்குது. முழு உலகமும் பார்த்துகொண்டு இருக்கிறது, இப்பதா அவங்க அந்தி கிறிஸ்துவின் நோக்கத்தை இந்த சாட்சிகள் தகர்த்துவிட்டதை பார்க்கிறார்கள். இது தேவனால் உண்டானது என்பதை முழு உலகமும் கண்டு அறிந்துகொள்ளும்.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:.**அப்படிதான், நினைக்கிறேன், ஜான், தேவன் அந்த இரண்டு சாட்சிகளுக்கு தனி எடுத்துகொள்ளப்படுதலை வைத்திருப்பார் – ஏன்னா அவங்க உயிர்த்தெழுந்த பிறகு பரலோகத்திற்கு எடுத்துகொள்ளபடுவார்கள் – ஒருவேளை அது இந்த உலகத்திற்கு செய்து சொல்வதற்கு இருக்கலாம், :ஏற்கனவே எடுத்துகொள்ளப்படுதல் சம்பவித்தாயிற்று, பொதுவான எடுத்துகொள்ளப்படுதல் இதில் எல்லா விசுவாசிகளையும் எடுத்துக்கொண்டேன். இது வேறு ஏதோவொன்று என்பது போல இதை பலவிதங்களில் சொல்ல முயற்சிக்கலாம். இங்க ஒரு விஷயத்தை நேரடியாக சொல்ல போகிறேன், இப்போதே சொல்றே, இதெல்லாம் என்னவென்று நீங்க நிச்சயம் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார்." தேவன் தம்முடைய இரக்கத்தினாலும் கிருபையினாலும் இன்னும் ஜனங்களுக்கு தம்மிடம் வரவும் விசுவாசிக்கவும் சந்தர்ப்பத்தை கொடுத்துகொண்டே இருக்கிறார் அதனால் சாக்கு சொல்ல வழியிருக்காது, "எங்களுக்கு எதுவமே தெரியாது. தேவனிடத்தில் இருந்து எந்த ஆதாரமும் வரலன்னு சொல்ல

முடியாது." போதுமான அளவு இருக்கு. சத்தியம் என்னன்னா, ஜனங்கள் வருவதற்கு நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கிறது. அவங்க வர்றாங்களா இல்லையான்றது தான் கேள்வியே.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், நேயர்களே, இது அருமையான தகவல்கள் என்று நீங்கள் நினைக்கலாம், இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம். நாம திரும்ப வந்ததும் மற்ற காரியங்களை பார்க்கலாம், வேதாகமம் ஒரு சிறிய கால இடைவேளை இருப்பதை காட்டுகிறது, இல்லையா? அதில் பங்குவகிப்பவர்களை பற்றி கூறுகிறது, நடக்கிற காரியங்களில் முக்கிய பங்கான சிலரை பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது, இல்லையா? அதாவது ஸ்கோர் கார்டை கையில வைத்திருக்கையில் திடீருன்னு பெயர்பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டு யார் யார் விளையாடுகிறார்கள என்று சொல்வதை போன்றது. நாம திரும்ப வந்ததும் அதை பற்றிதான் பேசிட இருக்கிறோம். தொடர்ந்து இணைந்திருங்கள்.

*********

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம இப்போது Dr. எட் ஹின்ட்சன் மற்றும் Dr. மார்க் ஹிட்ச்காக் மற்றும் Dr. ரான் ரோடாஸ் உடன் பேசிக்கொண்டு இருக்கிறோம். இங்க ஒரு சுவாரஸ்யமான இடத்திற்கு வந்திருக்கிறோம். திடீரென்று, புத்தகத்தின் நடுபகுதியில் மத்திய பகுதியில்., அதிகாரம் 12. இங்க செயல்பாடுகள் நிறுத்தி வைக்கப்படுகிறது. இப்போது ஆட்டக்காரர்கள் அறிமுகபடுத்த படுகிறார்கள். இந்த பூமியில் நடக்கும் காரியங்களின் முக்கிய ஆட்டக்காரர்கள் யார் என்று சொல்லப்படுகிறது. சரி, எட், நாம எங்க இருக்கிறோம் என்பதை புரியும்படி சொல்றீங்களா.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**.இதுவந்து அமெரிக்காவில் பேஸ்பால் விளையாட்டுக்கு போறது மாதிரி இருக்கு. ஒரு விளையாட்டு புத்தகத்தை வாங்குறீங்க,

அதுல நடுவில மதிப்பெண்கள் அட்டைகள் இருக்கும் அப்பறம் வரிசை அட்டை இருக்கும், இன்னைக்கு யார் விளையாட போறது. தேவனும் கூட வெளிப்படுத்தல் புத்தகத்தின் நடு பகுதியில் கடைசி காலத்தில் நடக்கும் அந்த நாடகத்தில் இருக்கும் ஏழு அடையாளங்களை கொண்டிருக்கும் வீரர்களை நிறுத்தி வரிசை இதுதான் என்று சொல்லுகிறார். முதலாவதாக ஒரு ஸ்திரீ பிள்ளைபேற்றை எதிர்பார்த்து கொண்டு இருக்கிறாள், அந்த பிள்ளையே தன்னை ஆண்பிள்ளை என்று விவரித்து கூறுகிறது, ஆனா அதுக்கு அப்பறம் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது; அப்பறம் மிகாவேல் தூதம் வான சேனையோடு சேர்ந்து சாத்தானோடு யுத்தம் பண்ணுகிறார். அதற்கு பிறகு மிஞ்சியிருக்கிற ஸ்திரீயின் வித்து வனாந்திரத்திற்கு ஓடிபோகிறது. சமுத்திரத்தில் இருந்து தோன்றும் மிருகம் இதை பலர் அந்தி கிறிஸ்துவாக எடுத்து கொள்கிறார்கள்; அடுத்து பூமியில் இருந்து தோன்றும் மிருகம் இது தெளிவாக கள்ள தீர்க்கதரிசியை குறிக்கிறது. இதை எப்படி புரிந்துகொள்வது என்பதற்கான கேள்விகளில் பலத்திற்கு வெளிப்படுத்ஹ்டின விசேஷத்தில் என்ன நடக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளும் விதத்தில் உள்ளது, குறிப்பாக இந்த ஸ்திரீ யார் அவளுடைய விதத்தில் மீந்திருப்பவரகள் யார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓகே, ரான். இதை பார்க்கலாம். வேதம் சொல்கிறது, “அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின் மேல்  பண்ணிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன. அவள் கர்ப்பவதியாயிருந்து பிரசவ வேதனையடைந்து பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்.” இப்ப. இதற்கு பல வியாக்கியானங்கள் சொல்லப்பட்டு இருக்கிறது, அதை புரிந்துகொள்ள வேதாகமம் உதவுகிறது. இந்த மாதிரியான அடையாளங்கள் சொலப்படும்போது, அது யாரை பற்றி சொல்லுகிறது என்பது அறிந்துகொள்ள வேதமே நமக்கு துணை செய்வதாக இருக்கிறது. அதை விளக்கிடுங்கள்.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...சரி, இது மரியாள் என்று எடுத்துகொல்லுகிற பலர் இருக்கிறார்கள்; ஏன்னா, அதாவது, மரியாள் தான் ஆண் குழந்தையாகிய இயேசுவை பெற்றெடுத்தாள். ஆனா இந்த விளக்கத்தில் உள்ள பிரச்சனை என்னன்னா இங்க சொல்லப்படுகிற ஸ்திரீ மரியாளுக்கு பொருத்தமாக இல்லை. மரியாளை எந்த ஒரு இடத்திலும் இப்படி விவரிக்கவில்லை, அதாவது, சூரியனை அணிந்திருந்தாள் அவள் பாதங்களின் கீழே சந்திரனும் அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன. அதுமட்டுமல்ல சாத்தானிடமும் அந்தி கிறிஸ்துவிடம் இருந்தும் உபத்திரவ காலத்திற்கும் தப்பிக்கும்படி நீண்ட காலம் வானாந்தரத்திற்கு தப்பித்து ஓடுகிறது போல சொல்லப்படவில்லை. அதனால இது பொருந்தாது.

இங்க என்ன நடக்கிறது என்பதை நாம் தெளிவாக புரிந்துகொள்ள இந்த வரிகள் நமக்கு உதவுவதாக இருக்கிறது.  உங்களுக்கு நான் சொல்ல விரும்புகிற வேத பகுதி ஆதியாகமம் 37:9-10, ஏன்னா வேதாகமத்தில் இந்த ஒரு பகுதியில் மட்டும்தான் நாம சூரியன் சந்திரன் மற்றும் பன்னிரண்டு நட்சத்திரங்களை பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. அதனுடைய பின்னனி யோசேப்பு இந்த சொப்பனத்தை காண்கிறான். அவனுடைய அந்த சொப்பனத்தை பற்றி அவனது குடும்பத்தாருக்கு சொல்கிறான், “ சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் எனக்கு முன்பாக பணிந்துகொள்வது போல சொப்பனம் கண்டேன் என்கிறான்.” அது இஸ்ரேல்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. அங்க இருக்குது.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...அது இஸ்ரேல் என்பது, மிக தெளிவாக இருக்கிறது. அப்படின்னா இந்த ஸ்திரீ இஸ்ரேல் தான்; அவள் பெற்றெடுக்கிற பிள்ளை என்பது இயேசுவை குறிக்கிறது. பிரசவ வேதனையில் அலறினாள் என்று சொல்லப்பட்டிருக்கிற காரியமானது, நீண்ட நாட்களாக நடக்கிற காரியங்களை குறிப்பதாக இருக்கிறது. யூத ஜனங்களுடைய வரலாற்றை பற்றி பார்ப்பீர்களானால், இயேசு கிறிஸ்துவின் பிறப்பை தடுப்பதற்கு சாத்தான் ஆரம்பத்தில் இருந்தே மிக கவனமாக விடாமல் முயற்சித்து

கொண்டு வருகிறான் என்பது புரியும். யோசித்து பார்க்கிறேன், உதாரணமாக, ஆமான் யூத குளத்தை முற்றிலுமாக அழிக்க முயற்சித்தான். ஏரோதை யோசிக்கிறேன் ராஜாவாகிய இயேசுவை கொள்ளும்படி முயன்று பல கைகுழந்தைகளை கொன்று போட்டான். இவற்றில் பெரும்பாலானவை பிசாசினால் தூண்டடப்பட்டவை என்பதில் சந்தேகம் இல்லை. நான் இந்த எல்லா காரியங்களையும் இந்த ஸ்திரீயின் பிரசவ வேதனை என்பதோடு ஒப்பிட்டு விளக்கமளித்திடுவேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இப்ப மீந்திருப்பவர்களை பற்றி சொல்லுங்க, ஸ்திரீயின் விதத்தில் மீந்தவர்கள்.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:...**அதாவது, வேதம் நமக்கு கூறுகிற காரியங்களில் ஒன்று உபத்திரவ காலத்தின் போது இஸ்ரேல் உண்மையில் பிழிந்து எடுக்கப்பட போகிறது. அதை சகரியாவில் பார்க்கிறோம், நல்ல உதாரணம். அங்க என்ன இருக்குது, இந்த பாடுகளின் நாட்களின் யூதர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அழிக்கப்படுவார்கள் என்று நான் நினைக்கிறன். இப்ப அந்த வித்தின் மீதமுள்ளவர்கள் வனாந்தரத்தை தேடி ஓட போகிறார்கள். இது எருசலேமின் தெற்கு பகுதியாக இருக்குமென்று தான் நான் நம்புகிறேன், அது பெட்ராவாக அல்லது பாஸ்ரா வாக இருக்கலாம். இந்த இரண்டு எல்லைகளும் மிக எளிதாக முடக்க கூடிய பகுதிகளாக இருக்க்ரியது. இந்த பகுதியானது உபத்திரவ காலத்தின் இறுதியில் அந்தி கிறிஸ்துவினால் அதிகமாக தாக்கப்படுவதாக இருக்கும், ஆனா இப்ப சில காலத்திற்கு பாதுகாப்பாக தோன்றும். சரி, இந்த பகுதியானது தொடர்ந்து எப்படி அந்தி கிறிஸ்து இந்த கூட்டத்திற்கு விரோதமாக ஒரு வெள்ளத்தை எழும்ப செய்ய போகிறான் என்று சொல்கிறது. சிலர் இதை உண்மையான புயல் வெள்ளம் என்கின்றனர். வேறு சிலர் இதை ஒரு விதமான ராணுவ சேனை என்கின்றனர், ஒருவிதமான தாக்குதல் என்கின்றனர். எப்படி இருந்தாலும், இந்த பூமியானது அந்த ஸ்திரீயை பாதுகாக்கும்படி எழும்புகிறது என்று கூறப்படுகிறது. அது ஒருவேளை வெள்ளமாக இருந்தால், ஒருவேளை பூமி பிளந்து திறக்கப்படலாம். அது சேனையாக

இருந்தால், ஒரு பூமியதிர்ச்சியோ பூகம்பமோ உண்டாகலாம், அதாவது, ஏதோவொரு விதமாக பூமி தன் வாயை திறந்து ஜனங்களை விழுங்கும் ஒரு நிலை உண்டாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** தேவன் அவர்களை பாதுகாக்கிறார், என்னானாலும் சரி.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:...**எப்படி பார்த்தாலும் சரி, தேவன் பூமியில் நடக்கும் காரியங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டிருப்பது புரியும், அவர்களை இந்த பூமியில் அவர் பாதுகாக்கிறார். தப்பி ஓடுகிற நபர்களுக்கு இந்த பூமி ஒரு தோழனாக மாறுகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இந்த குழந்தையை பற்றி பார்க்கலாம். அதாவது, இந்த குழந்தை இயேசுதான் என்பதில் கருத்து வேறுபாடுடைய அதை நிராகரிக்கிற கூட்டத்தினர் வல்லுனர்கள் யாராவது உண்டா?

**டாக்டர் எட் ஹிந்த்சன்:.**இல்ல, பொதுவா எல்லாருமே இது இயேசுதான் என்பதை புரிந்துகொள்கிறார்கள், ஏன்னா இவர்தான் பிதாவின் சிங்காசனத்திற்கு ஏறி சென்றவராக இருக்கிறார். இது தெளிவா இயேசுவை பற்றிதான் பேசுகிறது. அவர் ஆண் பிள்ளை என்பதுதான் உண்மை; சரி, கிங் ஜேம்ஸ் பதிப்பில், குழந்தை பாலகன் என்றிருக்கிறது, அதற்கு ஆண் பிள்ளை என்று அர்த்தம். இது வேறு யாரையும் சொல்லவில்லை; இது கிரிச்துவைதான் குறிக்கிறது. இஸ்ரவேலின் வழியில் வந்தவராக இருக்கிற இயேசுவை தான் குறிக்கிறது. சுவிசேஷத்தின் துவக்கமே இப்படிதான் இருக்கு, மத்தேயு 1, “இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு, தாவீதின் குமாரனும், ஆபிரகாமின் குமாரன்…” இஸ்ரவேல் தான் ஸ்திரீயாக கருதப்படுகிறது, வம்சம், அதில்தான் மேசியா வருகிறார். அது சபையாக இருக்க முடியாது, ஏன்னா அவள் கிறிஸ்துவின் தாயாக வர்ணிக்கப்படுகிறாள், அதோட சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறது. இது முற்றிலும் வித்தியாசமான ஒன்றாகும். இங்க இன்னொரு கேள்வி என்னன்னா, இந்த

வலிசர்ப்பம் யார், அது யாருன்னு அங்க அந்த வசனத்திலேயே சொல்லப்பட்டு இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. மார்க், உங்ககிட்ட வருகிறேன். வலுசர்பத்தை பற்றி வேறு ஏதாவது இருக்கா?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**..நா, என்ன நினைக்கிறேன்னா, எட் சொன்னது போல, வலுசர்ப்பத்தை பற்றி வசனமே தெளிவாக கூறுகிறது. அந்த வசனங்களை வாசிக்கும் போது அது பழைய பாம்பு என்று சொல்லப்பட்டு இருக்கிறது, அது சாத்தான், அதுதான் பிசாசு. அவன் யார் என்பது நமக்கு தெளிவாக கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதுல எனக்கு ஆச்சரியமான விஷயம் என்னன்னா, ஏதோ ஒரு கட்டத்தில் காலங்களாக நடக்கும் யுத்தம் வெளிபடுகிறது. ஏன்னா இது ஆதியில் உண்டான சாத்தானின் வீழ்ச்சிக்கு நம்மை அழைத்து செல்கிறது, அவனை பற்றி சொல்லப்பட்ட வசனங்களை, பார்க்கும்போது, “அவனுடைய வாலினால் வானத்தின் மூன்றில் ஒருபங்கு நட்சத்திரங்களை இழுத்து பூமியின் மீது எறிகிறான்.” இது சாத்தானின் முதல் வீழ்ச்சியை யோசிக்க வைக்கிறது, வான தூதர்களின் சேனையில்  மூன்று பங்கினர் அவனுடைய முரட்டாட்டத்தால் அவனோடு சேர்ந்து தள்ளப்பட்டார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அவனோடு சேர்ந்து போனார்கள்.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**..அதற்கு பிறகு இதை பார்க்க முடியும், அதாவது, இது தேவன் ஆதியில் சொன்ன வாக்குத்தத்தத்திற்கு நேராக நடத்துகிறது  ஆதியாகமம் 3:15  ஸ்திரீயின் வித்தானவர் சாத்தானின் தலையை நசுக்கிடுவார் என்ற வார்த்தை. அதற்கு பிறகு அவர் ஆபிரகாமில் இருந்து வருவார் என்று பார்த்தோம் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு. இப்ப சாத்தான் இந்த நீண்ட கால யுத்தத்தை தாக்குதலை யூத ஜனங்கள் மீது நடத்துகிறான். மேசியா பிறக்காமல் தடுக்க அவனால் இயலவில்லை என்பதால, அவன்

அடுத்து என்ன செய்கிறான், நாம சொல்வோம்ல மாற்று திட்டம் என்று, அதுபோல யார் மூலமாக மேசியா வருவாரோ அந்த ஜனங்களை கொல்ல அழிக்க அவன் முயற்சிக்கிறான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இப்ப நாம இங்க...

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**இங்க சாத்தானின் திட்டத்தை நாம பார்க்கிறோம், இது ஆரம்பத்தில் இருந்து விவரிக்கப்பட்டு இருக்கு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. தொடர்ந்து பார்க்கலாம். அதாவது, நாம சாத்தானை பற்றி பேசும்போது, இப்ப பரலோகத்தில் யோபுவின் காலத்தில் இருந்து தேவ சமுகத்தில் நிற்க கூடியவனாக இருக்கிற சாத்தானின் காட்சியை பெறுகிறோம், சரியா? அவன் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன் நின்று சகோதரர்களை குற்றப்படுத்துகிறான். ஆனா இப்ப நாம கதையின் இந்த கட்டத்தில் பார்க்கும்போது, எல்லாம் போதும் நிறுத்து என்று தேவன் சொல்லுகிற ஒரு நிலையை பார்க்கிறோம்; அங்கிருந்து வெளியேற்றப்படுகிறான். இங்க சில புதிய குணாதிசயங்களை பார்க்க முடியும். சாத்தான் இருக்கிறான், அதோடு கூட மிகாவேலும் அவனது தூதர்களும் இருக்கிறார்கள். இங்க என்ன நடக்குது?

**டாக்டர் எட் ஹிந்த்சன்:.**சரி, பரலோகத்தில் யுத்தம் உண்டாகிறது, என்கிறது, இதுல ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சாத்தாம் பூமிக்கு தள்ளப்படுகிறான். அப்படின்னா இது ஆதியிலிருந்து வீழ்ச்சி அல்ல; அது நித்தியமான ஆதிகாலத்தில் நடந்தது. வெளிப்படுத்திட விசேஷத்தில் சாத்தான் தோற்றுபோகிறவனாக இருக்கிறான். இந்த பூமியில் குறிப்பிட்ட நாட்கள் தான் இருப்பான். அவன் பித்தன், என்கிறது. பூமியில் உள்ள ஜனங்கள் மீது தனது உக்கிரத்தை ஊற்றுகிறான். அடுத்து,கிறிஸ்துவின் வருகை சொல்லப்படுகிறது, சாத்தான் ஆயிரம் வருடங்களுக்கு கட்டப்பட்டவனாக பாதாளத்தில் கிடப்பான். அதற்கு பிறகு கொஞ்ச காலம் விடுவிக்கப்பட்டு பிறகு நித்திய அக்கினி கடலில் அவன் இறுதியாக தள்ளப்படுவான். இந்த புத்தகத்தில் சாத்தானுடைய மூன்று

நிலையிலான வீழ்ச்சிகள் சொல்லப்பட்டு இருக்கிறது. இதுல கேள்வி என்னனா, அவன் பூமிக்கு தள்ளப்பட்ட காலத்தின் அளவு என்னவாக இருக்கிறது என்பதுதான். அதுதான் உபத்திரவ காலத்தின் பிற்பாதியான மூன்றரை ஆண்டுகளாக இருக்கும் என்று கருதப்படுகிறது. அப்படின்னா இங்க ஆட்டுக்குட்டியானவரின் கோபாக்கினை இருக்கிறது, சாத்தானின் உக்கிரம் இருக்கிறது, மனிதனுடைய உக்கிரமும் இருக்கு, அதற்கு பிறகு, கலச நியாயத்தீர்ப்பில் தேவ கோபாக்கினை வெளிப்படும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. முதல் முத்திரையில் வெள்ளை குதிரையின் மேல் ஏறியிருக்கிறவனை பார்த்தோம், அது அந்தி கிறிஸ்து என்பதை பற்றி ஏற்கனவே பார்த்துவிட்டோம். ஆனா இங்க அவன் மிகப்பெரிய அளவில் அறிமுகப்படுத்தப்படுகிறான். மேலும் சமுத்திரத்தில் இருந்து வரக்கூடிய மிருகத்தை பற்றியும் பேசியிருக்கிறான். மார்க், அவன் என்ன சொல்றான்னு சொல்றீங்களா?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**..அத, சொல்றேன். 12ம் அதிகாரத்தில் என்ன இருக்கிறது என்றால், மேசியாவின் மிகப்பெரிய எதிரியான சாத்தான் அறிமுகப்படுத்த படுகிறான், அதற்கு பிறகு யூத மக்களின் சத்துருவாக வெளிபடுகிறான். அதற்கு பிறகு இப்ப அறிமுகமாவது, உண்மையில், அந்த நாட்களில் யூத மக்களுக்கு எதிரான தன்னுடைய திட்டத்தை செயல்படுத்த அவன் பயன்படுத்த போகிற கருவிகளான மனிதர்கள் அறிமுகமாவார்கள். முதலாவதாக சமுத்திரத்தில் இருந்து தோன்றுகிற மிருகம். இங்க அந்த மிருகம் வருணிக்கப்பட்டிருக்கும் விதத்தை பார்க்கும்போது அது தானியேல் 7 ஐ நினைப்பூட்டுகிறது, அங்க ஏழு கொம்புகள் உள்ள மிருகமும் பத்து கொம்புகள் உள்ள மிருகமும் சொல்லப்பட்டு இருக்கிறது. இப்ப தானியேலின் புஸ்தகத்திற்கு கடந்து போகிறோம். எதிர்காலத்தில் இருக்கும் இந்த மிருகம், இறுதியில், ஒரு கூடு குழுமம் போல இருக்கும், அதாவது, பலவிதமான மிருகங்கள், எல்லா ராஜ்யங்களில் இருந்து எழும்பும்.

மேலும் வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்படும் மிருகமானது, சமுத்திரத்தில் இருந்து வெளிபடுவதாக சொல்லப்பட்டு இருக்கிறது. மேலும் வெளிப்படுத்தல் 17:15

கூறுகிறது சமுத்திரம் என்பது தேசங்களை குறிப்பதாக இருக்கிறது. அப்படின்னா பல ஜாதிகளின் தலைவர்களில் இருந்து புரஜாதியான ஒருவன் ஆட்சி செய்யும்படி அரசாளும்படி எழும்புவான். இந்த பகுதில் அவன் வர்நிக்கப்பட்டிருக்கும் விதத்தை பார்க்கும்போது என்ன தோன்றுகிறது என்றால் அவன் சாத்தானால் வல்லமை அளிக்கபட்டவனாக இருக்க போகிறான் என்று நினைக்கிறேன். அவன் முழு உலகத்தையும் ஆளுகை செய்ய போகிறவனாக இருப்பான். இது உண்மையில் புறஜாதிகளின் வலிமையினால் உலகத்தை ஆளப்போகிற கடைசி நபராக இருப்பார், இவன் சாத்தானால் வல்லமை அளிக்கப்பட்டவனும் அவனால் நடத்தப்படுகிறவனுமாக இருப்பான், மறுபடியும் யூதர்களுக்கு எதிராக எழும்பி அவர்களை முற்றிலுமாக அழிக்க முயலுவான். முழு உலகமும் தன்னைத்தான் தொழுதுகொள்ள வேண்டும் என்று சொல்லுவான். அவன் தான் இறுதியாக உலகை கட்டுபடுத்துகிறவனாக இருப்பான், அதாவது, இந்த பூமிக்கு கிறிஸ்து வருவதற்கு முன்பு இப்படி செய்வான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இன்னும் சில நிமிடங்கள் நமக்கு இருக்கிறது, எட். இங்க அந்தி கிறிஸ்துவை பற்றி நிறைய முக்கியமான தகவல்கள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதை பற்றி அடுத்த வாரம் இன்னும் அதிகமாக பார்க்க இருக்கிறோம். நாம என்ன பார்க்க போகிறோம் என்பதை சொல்லுங்கள். ஆனா இன்றைக்கு பார்த்த காரியங்களில் நீங்க இன்னும் என்ன கற்றுகொண்டீர்கள் என்று எங்களுக்கு சொல்ல முடியுமா?

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**.சரி, அந்தி கிறிஸ்து, இந்த புத்தகத்தின் பிற்பகுதியில், இதுவும் மிருகம் என்று தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறது. இவன்தான் ஆட்டுக்குட்டியான கிறிஸ்துவுக்கு எதிராக நிர்ப்பான். இந்த இறுதி யுத்தம் அர்மகெதொனில் சம்பவிக்க போகிறது. இதற்கு இடையில், வேதம் தெளிவாக கூறுகிறது இந்த உலகத்தில் அந்தி கிறிஸ்துவின் ஆவி எப்போதும் இருந்துகொண்டே இருக்கிறது, பொய் தேவன் – அந்து கிறிஸ்துவின் ஆவி தேவனுடைய காரியங்களுக்கும் கிறிஸ்துவின்

காரியங்களுக்கு எதிராக அமைந்திடும். யோவானின் நிருபத்தை பொறுத்தவரை நிறைய குட்டி குட்டி அந்தி கிறிஸ்துக்கள் இருக்கிறது, கள்ள தீர்க்க தரிசி மற்றும் கள்ள போதகர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனா இந்த நபர், இந்த அந்திகிறிஸ்து, எதிர்காலத்தில் தோன்ற போகிற நபர். இவர் ஒரு தனிநபர் இவரை பற்றி பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் தேசத்தோடு சமாதான உடன்படிக்கை செய்பவன் என்று இருக்கிறது, அந்த உடன்படிக்கையை உடைத்து, அவர்களை அழிக்க தன்னால் இயன்ற அனைத்தும் தாக்குதல்களையும் எதிர்கொள்வான். இதெல்லாம் தெளிவாக நமக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை நாம் பார்க்க இருக்கிறோம் என்று நினைக்கிறேன். இந்த மிருகமானது மனுக்குலம் என்னும் சமுத்திரத்தில் இருந்து எழும்ப போகிறவனாக இருக்கிறான். அவன் வந்து எல்லாத்தையும் பொறுப்பெடுத்து கொள்வான். இதுல பெரிய கேள்வி என்னன்னா, அவன் அப்படி வரும்போது என்ன நடக்க போகிறது?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இன்னொரு காரியத்தை பற்றியும் நாம் பார்க்க இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள், கள்ள தீர்க்கதரிசி, சரியா? இதையும், தானியேல் கூறுகிறார், இந்த காரியங்கள் சம்பவிக்கும்போது நாம் உபத்திரவ காலத்தின் நடுபகுதியில் இருப்போம், முதல் மூன்றரை வருடத்தை பார்த்துகொண்டு இருக்கிறோம். நாம உபத்திரவ காலத்தின் மத்திய பகுதியில் இருக்கிறோம் என்பதை எந்த நிகழ்வு நமக்கு உறுதியளிகிறது? அடுத்த நிகழ்ச்சியில் இதை பற்றி பார்க்கலாம். தவறாமல் பாருங்கள்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.